களிடத்திலே இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நீண்ட நெடுங்காலமாக இருந்துவருகிற இந்தக் கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய முறையில் நல்ல சாலையாக, கப்பி சாலையாகப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்போது அந்த சாலைக்காக ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் அளவில் எஸ்டிமேட் போடப்பட்டு நாகை கோட்டப் பொறியாளர் டெண்டர் விட்டிருக்கிறார். அதற்காக 6,152 ரூபாய் அளவிலே பார்ட் பேமண்ட் கொடுத்திருக்கிறார்கள். இந்த வேலை ஆகஸ்டு மாதத்திற்குள் முடிந்துவிடும் என்ற தகவல் வந்திருக்கிறது.

வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

* 717. வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியத் தலைவர் மீதும், ஆணையாளர் மீதும் கையாடல் குற்றங்கள் அடங்கிய புகார் மனு ஏதேனும் அண்மையில் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) புகார் மனுவின் மீது அறிக்கை அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநரும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் கோரப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இறுதி அறிக்கை அரசுக்கு அனுப்பப்படவில்லை. இறுதி அறிக்கை வரப்பெற்றதும் பரிசீலனைக்குப் பின் தகுந்த ஆணை பிறப்பிக்கப்படும்.

காரியப்பட்டி ஊராட்சி

* 718. வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், காரியப்பட்டி ஊராட்சியில் ஒரு பகுதிக்கு (Ward) பெயர் மாற்றப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு அண்மையில் வந்துள்ளதா?

1975 ஏப்ரல் 18]

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 719, 720 ஒத்தி வைக்கப்படுகின்றன.

Harijan Welfare Schools.

* 678 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether the Harijan Welfare Schools in rural areas of the State particularly elementary sections work with slender attendance during the agricultural season?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : ஆம். சில அரிசன நலப் பள்ளிகளில் மட்டும்தான்.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், அறுவடை வேலை நடைபெறும் காலங்களில் அரிசனப் பள்ளிகளில் அரிசன மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : அறுவடைக் காலங்களிலே சிறு குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக அதைக் கவனிக்கக்கூடிய குழந்தைகளை வீட்டிலேயே தாய் தந்தையர்கள் விட்டுவிடுகிறார்கள். அதனால் அவர்கள் பள்ளிக்கு வருவதில்லை. சில தாய் தந்தையர்கள் அந்தப் பிள்ளைகளையே அறுவடைக் காலங்களில் அழைத்துச் சென்று விடுகிறார்கள், இது வழக்கமாக இருந்துவருகிற ஒன்று. சில மாவட்டங்களிலே சில நேரங்களிலே இப்படிப்பட்ட அறுவடை காலங்களிலே இப்படிப்பட்ட நிலை 15 நாட்கள் லீவு விடுகிறார்கள். அதிலே தென் ஆர்க்காடு மாவட்டத்திலே இது அதிகம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், அறுவடைக் காலங்களிலே இம் மாதிரிக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது குறைகிறது என்பது வெகு நாளாக நடந்துவருகிற ஒன்று என்று அமைச்சர் சொன்னார். அதற் காக அவர் சொன்ன காரணம் வேறு மாதிரியாக இருக்கிறது. உழவடை செய்கின்றவர்களுக்கு அவர்களுக்குக் கிடைக்கின்ற வருவாய்